இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் (சிறப்பு) கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

மட்டம் - 06

இறுதிப்பரீட்சை – 2022/2023

**SNU6224/ESU4124 – கல்வி முகாமைத்துவம்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

திகதி:- 03.12.2023

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடைதருக.

## பகுதி – I

1. முகாமைத்துவம் என்றால் என்ன? சுருக்கமாக விளக்குக.
2. "ஒரு ஒழுங்கமைப்பின் அடையக்கூடிய நோக்கங்கள் சிக்கலானதாக இருக்கலாம்" அத்தகைய சிக்கலான தன்மைக்கு ஏதேனும் மூன்று (03) காரணங்களைக் குறிப்பிடுக.
3. பாடசாலை சூழல் தொடர்பாக பொருத்தமான உதாரணங்களை தந்து "உள்ளக மற்றும் வெளியக வினைத்திறன்" என்ற எண்ணக்கருக்களை வேறுபடுத்துக.
4. ஒரு ஒழுங்கமைப்பின் தூரநோக்கு மற்றும் நோக்கு (Vision and Mission) என்றால் என்ன?
5. F.W டெய்லர் அறிமுகப்படுத்திய விஞ்ஞான முகாமைத்துவக் கோட்பாட்டின் ஐந்து (05) நிர்வாகப் கொள்கைகளைக் குறிப்பிடுக.
6. இலங்கை கல்வி அமைச்சின் ஐந்து (05) நிர்வாகப் பொறுப்புக்களைக் குறிப்பிடுக.
7. விளைதிறனான அதிபரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் நான்கு (04) தலைமைப் (Leadership) பண்புகளை பட்டியலிடுக.
8. பிளேக் & மவுட்டனின் முகாமைத்துவ சட்டகத்தின்படி, "9.9 பாணி (Style 9.9)" (அணி முகாமைத்துவம் Team Management) ஒரு நல்ல முகாமையாளருக்கான சிறந்த பாணியாகும். இந்த பாணியில் முகாமையாளரின் ஐந்து (05) பாத்திரங்களைக் குறிப்பிடுக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

09.

**i.** முகாமைத்துவ செயல்முறை என்பதனால் நீங்கள் யாது கருதுகின்றீர்கள்? **(04 புள்ளிகள்)**

**ii.** முகாமைத்துவ செயல்முறையின் ஒரு (01) கூறைத் தேர்ந்தெடுத்து, பாடசாலை முகாமைத்துவத்திற்கு அதன் முக்கியத்துவத்தை சுருக்கமாக விளக்குக. **(06 புள்ளிகள்)**

**iii.** மேலே தேர்ந்தெடுக்கப்பட்ட கூறுடன் தொடர்புடைய இரண்டு (02) பிரச்சினைகள்/சவால்களைக் கண்டறிந்து, அந்தச் சவால்கள்/சிக்கல்களை சமாளிக்க/குறைக்க பொருத்தமான பரிந்துரைகளை வழங்குக. **(10 புள்ளிகள்)**

10. “ஒரு பாடசாலையின் விளைதிறன் அதன் அடையாளம் காணப்பட்ட மற்றும் தெளிவாக வெளிப்படுத்தப்பட்ட இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைய நிர்வகிக்கும் அளவிற்கு தீர்மானிக்கப்படுகிறது.”

**i.** விளைதிறனுள்ள பாடசாலை என்பதனால் நீங்கள் யாது கருதுகின்றீர்கள்? **(04 புள்ளிகள்)**

**ii.** இலங்கையில் விளைதிறனுள்ள பாடசாலைகளை அடையாளம் காண்பதற்கு வசதியாக தேசிய கல்வி ஆணைக்குழுவினால் (NEC) முன்மொழியப்பட்ட நான்கு (04) அளவுகோல்களைக் (Criteria) குறிப்பிடுக. **(08 புள்ளிகள்)**

**iii.** மேலே உள்ள ஒரு (01) அளவுகோலைத் தேர்ந்தெடுத்து, தேர்ந்தெடுக்கப்பட்ட அளவுகோல் தொடர்பாக பாடசாலை எதிர்கொள்ளும் இரண்டு (02) பிரச்சினைகளைக் கண்டறிந்து, அந்த பிரச்சினைகளைச் சமாளிக்க இரண்டு (02) பரிந்துரைகளைச் செய்க. **(08 புள்ளிகள்)**

11. “கல்வித் துறையில் நிலவும் பிரச்சினைகள் எப்போதும் கல்வியின் தரத்தின் வீழ்ச்சியைப் பாதிக்கின்றன.”

**i.** இலங்கையில் கல்வி முகாமைத்துவ துறையில் நிலவும் நான்கு (04) பிரச்சனைகள் / எழுவினாக்களை பட்டியலிடுக. **(06 புள்ளிகள்)**

**ii.** இலங்கையின் கல்வி முகாமைத்துவ துறையில் இவ்வாறான பிரச்சனைகள் ஏற்படுவதற்கு பங்களிக்கும் நான்கு (04) காரணிகளைக் குறிப்பிடுக. **(06 புள்ளிகள்)**

**iii.** நீங்கள் மேலே குறிப்பிட்டுள்ள (11 – **i**) இது போன்ற இரண்டு (02) சிக்கல்கள்/எழுவினாக்களைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பிரச்சினைகள்/எழுவினாக்களை சமாளிக்க/குறைக்க பொருத்தமான தீர்வுகளை சுருக்கமாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

12. “கல்வி முகாமையாளர்களுக்கு கல்வி முகாமைத்துவத்தில் தரமான பயிற்சி அளிப்பது கல்வி அமைச்சின் இன்றியமையாத பணியாக அடையாளம் காணப்பட்டுள்ளது”

**i.** கல்வி முகாமையாளர்களுக்கு ஏன் முகாமைத்துவப் பயிற்சி தேவை என்பதை விளக்குக. **(04 புள்ளிகள்)**

**ii.** கல்வி முகாமைத்துவப் பயிற்சிக்கு கருத்தில் கொள்ள வேண்டிய நான்கு (04) பரப்புக்களை சுருக்கமாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

**iii.** கல்வி முகாமைத்துவத்தில் பயிற்சி அளித்த பிறகு கல்வி முறைமை அடையக்கூடிய நான்கு (04) நன்மைகளை விளக்குக. **(08 புள்ளிகள்)**

13. தலைமைத்துவம் **(Leadership)** என்பது ஒரு முக்கிய முகாமைத்துவச் செயல்பாடாகும், இது ஒரு நிறுவனத்தின் வளங்களை மேம்படுத்தப்பட்ட வினைத்திறன் மற்றும் இலக்குகளை அடைவதற்கு உதவுகிறது.

**i.** தலைமைத்துவம் என்ற பதத்தினை சுருக்கமாக விளக்குக. **(04 புள்ளிகள்)**

**ii.** எந்தவொரு தலைமைத்துவ கோட்பாடு மற்றும் அதன் முக்கிய பண்புகளை விளக்குக. **(06 புள்ளிகள்)**

**iii.** பிளேக் மற்றும் மவுட்டனின் முகாமைத்துவச் சட்டகத்தை விளக்குக. **(10 புள்ளிகள்)**

14. **"கல்வியின் தர மேம்பாட்டிற்கு பாடசாலை அடிப்படையிலான மேற்பார்வை சரியான நேரத்தில் தேவை."**

**i.** பாடசாலை மட்டத்தில் மேர்பார்வை செயல்முறையின் நான்கு (04) இலக்குகள் / நோக்கங்களைக் குறிப்பிடுக. **(06 புள்ளிகள்)**

**ii.** வகுப்பறை மேற்பார்வையில் விளைதிறனுடைய மேற்பார்வையாளரிடம் எதிர்பார்க்கப்படும் நான்கு (04) குணங்களை சுருக்கமாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

**iii.** உள்ளக மேர்பார்வையை மேற்கொள்ளும் போது அதிபர்கள் எதிர்கொள்ளும் நான்கு (04) பிரச்சினைகளை சுருக்கமாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -